திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கரும்பிலிருந்து வரும் செஸ் பணத்தைக் கொண்டு சர்க்கரை ஆலைக்குப் போவதற்கான சாலை போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்குச் செலவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டு இருந்தாலும், பல இடங்களில் இந்த சாலைகள் சீர் செய்யப்படாமலேயே இருந்து வருவதை அரசு அறியுமா, அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அநேகமாக இந்த செஸ் பணத்தைக் கொண்டு ஆலைகளுக்கு வசதிகள், ரோட்டு போன்ற வசதிகள் செய்து தரவேண்டும் என்று இருப்பது உண்மைதான். கொடுக்க வேண்டிய பாக்யையே கொடுப்பதற்கு அந்த ஆலைகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இப்போது அதில் அதிகமாக ஏதும் செய்ய இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார். தனிக் கேள்வி போட்டால் அதற்கு விடை அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Sugarcane Producers.

* 157 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government of India have issued instructions to the State Government to launch prosecutions against Sugar Mills Owners for dues to be paid to sugarcane producers ; and

(b) if so, the details thereof?

கரும்பு உற்பத்தியாளர்கள்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சர்க்கரை ஆலைச் சொந்தக்காரர்கள் கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கொடுக்காமலிருப்பது குறித்து அவர்கள்மீது வழக்குத் தொடருமாறு மாநில அரசுக்கு இந்திய அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட 1966-ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின் 3-வது பகுதியைச் சேர்ந்த (3) உட்பகுதியின்கீழ் (ஆலைக்குக்) கரும்பு சேர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் கரும்புக்குரிய விலை கொடுக்கப்பட வேண்டும். ஆகவே, கரும்பு விலையை உரியகாலத்தில் கொடுக்கத் தவறுகிற ஆலைகள் மீது வழக்குத் தொடருதல், உட்பட கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய அரசு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும் செய்யப்படுவதுபோல் கரும்பு விலை நிலுவைகளை நிலவரி நிலுவைகளைப்போல் வசூல் செய்யும் பொருட்டு, கரும்பு (வழங்கலையும் கொள்முதலையும் முறைப்படுத்துதல்) சட்டத்தில் விதித்துறைகள் செய்யுமாறு இந்திய அரசு தெரிவித்த கருத்துரை பரிசிலனையிலுள்ளது.

Sugarcane Prices.

* 158 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the State Government have requested the Union Government to fix the sugarcane prices on recovery basis ; and

(*b*) if so, the details thereof ?

கரும்பு விலைகள்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை அளவை ஒட்டி கரும்பு விலைகளை நிர்ணயிக்க வேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.